மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வே எண் அல்லது கல் நடுவதற்கு முன்னால், அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதைச் சரிபார்த்து சரியாக அளந்து தான் அந்தக் கற்கள் நடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக கற்கள் நடப்படுவதில்லை. எங்காவது தவறு ஏற்பட்டால், அதைத் திருத்திக் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம். இப்படிப் பொதுவாகச் சொல்வதைவிட உதாரணமாக இந்த இந்த இடத்தில் இப்படி இப்படியெல்லாம் தவறு நடந்திருக்கிறது என்பதை எடுத்து, நீங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அது சரியா இல்லையா என்பதை ஆராய்ந்து, அது தவறுதான் என்று தெரிந்தால், தவறு வருவதற்குக் காரணம் என்ன, அதற்கான அடிப்படையைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடைபெறமால் இருக்க நடவடிக்கை எடுப்பதற்கும், அப்பேர்ப்பட்ட தவறுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண் 25—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு பூராவும் இரண்டாண்டில் தமிழக அரசு அமுல் படுத்துவதால் வேலை வாய்ப்புக்களும் பதவி உயர்வும் ஏற்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) சர்வே பயிற்சிக்கு தனியே கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ, ஆ மற்றும் இ.) பேரவைத் தலைவர் அவர்களே, நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதை செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2, 3 ஆண்டுகளில் வேலை முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் மொத்தம் புதியதாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? அதனால் எத்தனை பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 5,500 பட்டதாரிகளுக்கும் அல்லது இறுதி வகுப்பு தேறியவர்களுக்கும் வேலை கிடைக்கும் என்று கருதப்படுகிறது. அது மட்டுமல்லாமல், கிராமங்களில் அன்றாடம் தினக் கூலியாக வேலை செய்யும் 20,000 பேர்களுக்கு அதிகமானவர்களுக்கு இதிலே வேலை கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே' இந்த இந்த சர்வே செய்வதற்கு நூற்றுக்கணக்கான சர்வேயர்கள் பயிற்சிப்பெற வேண்டியிருக்கிறது. அதற்கு போதிய சர்வே பயிற்சி கல்லூரிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : சர்வே பயிற்சி செய்வதற்கு உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அந்த நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலவுடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் அமுலபடுத்தப்பட்ட நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கனவே கூட்டுப் பட்டா வழங்கப்பட்ட காரணத்தால் சரியாக ரீ-சர்வே செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் கூட்டுப் பட்டா வழங்கப்பட்ட காரணத்தால் பல சிவில் வழக்குகளும், பல போலீஸ் வழக்குகளும் நடப்பதற்கு காரணமாக இது இருப்பதால் கூட்டுப்பட்டாக்களை தனிப் பட்டாக்களாக வழங்க வேண்டும் என்று பல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அது சம்பந்தமாக பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் கூட்டுப் பட்டாக்களை, தனிப் பட்டாக்களாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட மாவட்டம் அது. ஆகவே இதற்கு முன்னால் ரீ-சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்களிலிருந்து மீண்டும் ரீ—சர்வே செய்யவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதையும் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்,